# எல்பிட்டிய பிரதேச சபை

## காலி மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மே 10 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 27 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஒக்தோபர் 31 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள எல்பிட்டிய பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கமநெகும செயற்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டிற்காகக் கிடைக்க வேண்டிய ரூபா 17,103,617 தொகையான மூலதன உதவி நிதிக்கூற்றுக்களில் கைவிடப்பட்டிருந்தது.

(ஆ) 16 அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 3,518,091 தொகைக்காக நிதிக்கூற்றுக்களில் ரூபா 2,388,119 தொகை மாத்திரம் நிதியேற்பாடு வழங்கப்பட்டமையினால் மூலதனச் செலவினம் மற்றும் கடன்கொடுத்தோர் ரூபா 1,129,972 தொகையினால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஓய்வூதிய உள்ளூராட்சி ஊழியர்களுக்காக ஓய்வூதியத் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 6,724,372 தொகையான பங்களிப்புப் பணத்திற்காக நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

(அ) பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 18 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த ஐய வினாக்களுடன் தொடர்புடைய கணிப்பீடு செய்யக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 5,804,981 ஆகும்.

(ஆ) தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 63,495,363 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,432,236 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,038,427 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

## 2.5 வீதி விளக்குகளைப் பராமரித்தல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அதிகாரப் பிரதேசத்தில் பராமரிக்கப்படுகின்ற வீதி விளக்குகளை தனித்தனியாக இனங்காண்பதற்குரிய முறைமை ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. வீதி விளக்குகளை பராமரிப்பதற்காக உப பாகங்களை விநியோகிக்கும் போது உரிய குறிப்பிட்ட மின்விளக்குகளை இனங்காண்பதன் மூலம் அது மேற்கொள்ளப்படாமையினால் அந்தந்த வீதி விளக்குகளுக்காக பொருத்தப்பட்ட உப பாகங்களின் காலப்பகுதியை கண்டறியும் முறைமை ஒன்று சபையினால் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2008 மார்ச் 14 ஆந் திகதியின் பின்னர் மின்சார சபையுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமையினால் மீளாய்வாண்டின் போது வீதி விளக்குகளை பராமரிப்பதற்காக செய்யப்பட்ட ரூபா 515,550 தொகையான முழுத்தொகையும் சபை நிதியத்திற்கு செலவினப் பொறுப்பாக இருந்தது.

## 2.6 காணி ஏல விற்பனை

(அ) இதிபலேகொட காணி

சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள இதிபலேகொடயில் 9 ஏக்கர் 12.9 பேர்சஸ் காணியில் வரைபட இல. 373/2011 மூலம் 94 கூறுகளாகப் பிரித்து சபையினால் அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் திகதியின்றி அங்கீகரிக்கப்பட்டிருந்தது. 2013 மார்ச் 25 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இந்தக் காணியை அங்கீகரிக்கும் போது தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் 2012 மே 03 ஆந் திகதி விநியோகிக்கப்பட்ட கடிதத்தின் சிபார்சுகள் அமுல்படுத்தப்பட வேண்டியிருந்த வேண்டியிருந்த போதிலும் அச்சிபார்சுகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

x இந்தக் காணியில் உள்ள சுற்றுவட்ட வீதிகளை பயன்படுத்தக்கூடிய முறையில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய போதிலும் திட்டத்தின் தென் பகுதியிலுள்ள கூறு இல. 91 இற்கு அடுத்தாகவுள்ள 20 அடி அகலமான வீதிக்கு மண் போடப்பட்டு மேல் பகுதி பயன்படுத்த

முடியாத முறையில் வீதியின் மத்தியிலுள்ள நீர் வடிந்து செல்லும் காணிலும் பரவியிருந்தது.

x சுற்றுவட்ட வீதிகளுக்கு சமாந்தரமாக வடிகால் முறைமையொன்று காணியில் ஏற்படுத்தப்பட்ட வேண்டியிருந்ததுடன் மழை காலங்களில் நிலக்கூறுகளிலுள்ள நீர் அந்தக் காணின் ஊடாக கீழிறங்கச் செய்யக் கூடியதாக ஏற்படுத்தப்பட வேண்டுமென காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் பிரதான வீதிக்கு அண்மையில் திரும்புகின்ற காணியின் மேற்பகுதியில் காண் அமைக்கப்பட்டிருந்த போதிலும் கொங்கிரீட் போடப்படாமையினால் காண் அழிவடைந்திருந்தது.

(ii) சபைக்கு வழங்கப்பட்டுள்ள கூறு இல. 89 இல் காண்பிக்கப்பட்டுள்ள 15 பேர்சஸ் காணிப்பகுதியில் 9 ஏக்கர் 12.9 பேர்சஸ் காணியில் கிழக்குப் பகுதியின் முடிவில் காணப்படுகின்ற காணிக்கூறானமையால் பொதுச் செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தக் கூடிய முறையில் பொருத்தமான காணிக் கூறுகள் இல்லாதிருந்தமையும் காணி பள்ளப்பகுதியாக இருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

**(ஆ) சினமன் பார்க் காணி**

சபை அதிகாரப் பிரதேசத்தில் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான எல்லையில் 4 ஏக்கர் 32 பேர்சஸ் அளவினையுடைய சினமன் பார்ச் என்ற பெயரில் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட காணி வரைபட இல. 1555 இன் மூலம் 47 கூறுகள் பிரித்து ஒதுக்கப்பட்டு சபையினால் 2012 மார்ச் 13 ஆந் திகதி அபிவிருத்தி அனுமதிப் பத்திரம் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக 2013 மார்ச் 25 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவரினால் 1991 செப்தெம்பர் 30 ஆந் திகதி வழங்கப்பட்ட 1/5/01/10(ii) ஆம் இலக்க சுற்றுநிருபத்தில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் காணியை ஏலத்தில் விற்பனை செய்யும் போது 1 ஹெக்டேயருக்கு அதிகமாயின் வீதி ஒதுக்கீடுகளுக்குப் பின்னர் மொத்தக் காணி அளவில் 10 சதவீதமானது சபைக்கு சமூக மற்றும் களியாட்ட செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தக் கூடிய வகையில் பொருத்தமான இடமொன்று வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும் இந்தக் காணியில் வீதி ஒதுக்கீடுகளுக்குப் பின்னர் காணியின் அளவில் 582.87 பேர்சஸில் 10